# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்

## பாடம் 24: மற்றவர்களின் அங்கீகாரம்?

**மத்தேயு 26:31-75**

### நடந்த கதை . . .

இயேசுவை பேதுரு நேசித்தார்; மக்களின் அங்கீகாரத்தையும் விரும்பினார். அப்போஸ்தலர்கள் தம்மை விட்டுவிட்டுப் போய்விடுார்கள் என்று கடைசி போஜனத்தில் இயேசு எச்சரித்தபோது, பேதுரு குதித்தெழுந்தார்; அனைவரும் மறுதலித்தாலும் தான் மறுதலிப்பதில்லையெனத் துடுக்காகப் பதிலளித்தார். ''இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்குமுன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய்'' என்று இயேசு சொன்னார். வச 34.

பேதுரு நல்ல எண்ணத்தில்தான் பேசினார்; ஆனால், உள்ளத்தில் அகங்காரம் இருந்தது. அன்றிரவில் இயேசுவைக் கைதுசெய்ய வந்த கூட்டத்தினரிடமிருந்து, தன் போதகரைக் காப்பாற்ற பேதுரு பட்டயத்தை உருவினார். கொஞ்சநேரம் கடந்தது; இயேசுவை விசாரித்தார்கள்; இயேசுவை விரோதித்த சிலர் பேதுருவை ஏளனமாகப் பேசினார்கள்; இயேசுவை தனக்குத் தெரியாதென்று பேதுரு மூன்று முறை மறுதலித்தார். ஒவ்வொரு முறை மறுதலிக்கும்போதும் தீவிரம் அதிகரித்தது; அவரைத் தெரியாதென்று சபிக்கவும், சத்தியம்பண்ணவும் செய்தார். வச 74.



அப்போது சேவல் கூவிற்று. இயேசு விசாரணை அறையில் இருந்தார்; வீரர்கள் அவரை அடித்தார்கள். இயேசு கனிவோடும், உருக்கத்தோடும் தன்னைத் திரும்பிப் பார்த்ததை பேதுரு கண்டார்; அவர் உள்ளம் உடைந்தது. 'சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே போய், மனங்கசந்து அழுதான்'. லூக்கா 22:61,62.

அன்றுமுதல் பேதுரு புதுமனிதரானார். மக்களைப் பிரியப்படுத்தாமல், தேவனைமாத்திரம் பிரியப்படுத்தத் தீர்மானித்தார். மனம்மாறியபிறகு, யூத ஆலோசனை சங்கத்தினர் அவரை விசாரித்தனர்; இயேசுவைப் பிரசங்கித்தால், அடிப்பதாக மிரட்டினார்கள்; அப்போது அவர் பயமின்றி, ''மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது'' என்று பதிலளித்தார். அப் 5:29. நீரோ மன்னன் இயேசுவை மறுதலிக்கும்படி பேதுருவை நிர்ப்பந்தித்தபோது, அதற்கு இணங்கவில்லை; பேதுருவை தலைகீழாகச் சிலுவையில் அறைந்தார்கள்; அப்படியாக இயேசுவின்மேலான அன்பையும், தான் இயேசுவுக்கு உண்மையாக இருந்ததையும் இறுதியாக பேதுரு நிரூபித்தார்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

## 1. நாம் தேவனுடைய பக்கத்தில் இருக்கிறோமா இல்லையா என்பதை தேவன் எவ்வாறு தீர்மானிக்கிறார்?

**மத்தேயு 7:21.** *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி ____________ பரலோகராஜ்யத்தில் ____________________யல்லாமல், என்னைநோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.*

**ரோமர் 6:16.** *மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ____________________, அதற்கே கீழ்ப்படிகிற ______________ இருக்கிறீர்களென்று அறியீர்களா?*

**குறிப்பு:** நம் மெய்ப்பற்று யார்மேல் இருக்கிறது என்பதை ஒரு எளிய நியதிமூலம் அறியலாம். அதாவது நாம் யாருக்குச் செவிகொடுக்கிறோமோ, அவர்மேல்தான் நம் மெய்ப்பற்று இருக்கிறது. நம்மை நாம் தேவனுடைய ஊழியர்கள் என்று சொல்லிக்கொண்டே பிசாசு அல்லது உலகத்திடமிருந்து ஆலோசனைபெற்றால், நம்மைநாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம்.

## 2. தேவனுடைய கற்பனைகளுக்கும் மனிதரின் கட்டளைகளுக்கும் முரண்பாடு ஏற்படும்போது, நான் எதற்குக் கீழ்ப்படியவேண்டும்?

**அப்போஸ்தலர் 5:29.** *அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் ________________ கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது.*

**குறிப்பு:** பேதுரு மனம்மாறி, இயேசுவை மெய்யாகவே நேசிக்க ஆரம்பித்தபோது, இயேசுவின்மேல் தனக்கு மெய்ப்பற்று இருப்பதாக யூத ஆலோசனைச் சங்கத்தில் தெரிவித்தார். கடைசிநாட்களில், மிருகத்தின் சட்டங்களும் உலகத்தின் சட்டங்களும் தேவனுடைய சட்டங்களுக்குப் புறம்பானவைகளாக இருக்கும் என்று நமக்குத் தெரியும். விளைவு என்னவாக இருந்தாலும், தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய இப்போதே தீர்மானிக்கவேண்டும்.

## 3. தேவன்மேல் நமக்குள்ள அன்பை வெளிப்படுத்த மிகச்சிறந்த வழி எது?

**யோவான் 8:31.** *நீங்கள் ______ __________________ நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்.*

**யோவான் 14:15.** *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் ____________________.*

**1யோவான் 2:4.** *அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய ________________ கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை.*

**குறிப்பு:** இயேசுவின் சித்தப்படி செய்பவர்தான் இயேசுவின்மேல் தனக்கு உண்மையான அன்பு இருக்கிறதை வெளிப்படுத்துகிறார். தேவனுடைய கற்பனைகள்தாம் அவருடைய சித்தத்தை பரிபூரணமாக வெளிப்படுத்துகின்றன. சங்கீதம் 40:8.

## 4. மாய்மாலக்காரர்கள் ஏன் நம்பிக்கையுள்ளவர்கள்போல் நடித்தார்கள்?

**மத்தேயு 6:2.** *மனுஷரால் ________________.*

**மத்தேயு 6:5.** *மனுஷர் __________________.*

**குறிப்பு:** 'மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்' என்று வேதாகமம் கூறுகிறது. 1சாமுவேல் 16:7. உண்மையான கிறிஸ்தவன் உலகம் தன்னைப்பற்றி நினைப்பதைவிட தேவன் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறார் என்பதில்தான் அதிக அக்கறைகாட்டுவான்.

## 5. கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து ஒன்றைச் செய்வது நல்லதா?

**யாத்திராகமம் 23:2.** *தீமைசெய்ய திரளானபேர்களைப் ________________________பாயாக.*

**மத்தேயு 7:13,4.** *இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; ______________ போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் ___________________. ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.*

**1பேதுரு 3:20.** *நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, ... அந்தப் பேழையிலே ______________ எட்டுப்பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே ___________________________.*

**குறிப்பு:** கும்பலாகச் சேர்ந்துவிட்டால் பெரும்பாலும் தவறான தீர்மானங்கள்தாம் எடுக்கப்படுகின்றன என்று வரலாறு காட்டுகிறது. கூட்டங்கூடிய சிலர்தான் மோசேயைக் கல்லெறிந்துவிட்டு, மீண்டும் எகிப்தின் அடிமைத்தனத்திற்குள் செல்ல விரும்பினார்கள். (எண்ணாகமம் 14:4–10). "அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று கூக்குரலிட்டதும் மக்கள் கூட்டம்தான். லூக்கா 23:21. கொஞ்சப்பேர் அல்ல, திரளானகூட்டத்தார்தான் கடைசிநாட்களில் மிருகத்தின் முத்திரையைப் பெறப்போகிறார்கள். வெளிப்படுத்தல் 13:16.

## 6. தேவனுடைய கற்பனைகளைப் புறக்கணித்துவிட்டு, மனிதரின் பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் அளித்தால் என்னவாகும்?

**மாற்கு 7:7–9.** *மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, ________________ எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிற பிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான் ... பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் ___________ பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது.*

## 7. கடைசிக்காலத்தில் மெய்யான கிறிஸ்தவ மார்க்கம் பிரபலமாகுமா?

**மத்தேயு 24:9.** *என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் ___________________________.*

**2தீமோத்தேயு 3:12.** *கிறிஸ்து இயேசுவுக்குள் ______________________ நடக்க மனதாயிருக்கிற யாவரும் _____________________________.*

**வெளிப்படுத்தல் 12:17.** *அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான _________________________ _________________________ போயிற்று.*

**வெளிப்படுத்தல் 13:15.** *மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் __________________செய்யத்தக்கதாக ... சத்துவங்கொடுக்கப்பட்டது.*

**குறிப்பு:** கடைசி நாட்களில், தேவனுடைய உண்மையான பிள்ளைகள்மேல் சாத்தானும் அவனுடைய கூட்டாளிகளும் இறுதி யுத்தத்தைத் தொடுப்பார்கள்.

## 8. தேவனையும் உலகத்தையும் ஒரே நேரத்தில் தொழுவது சாத்தியமா?

**மத்தேயு 6:24.** *இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் __________________, மற்றவனைச் _______________________; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.*

**மத்தேயு 12:30.** *என்னோடே இராதவன் எனக்கு ________________________________.*

**குறிப்பு:** கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கிற இந்த யுத்தத்தில் நடுநிலை வகிக்க வாய்ப்பே இல்லை. அந்த யுத்தத்தை வெறுமனே பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பார்வையாளன் போலும் நிற்கமுடியாது. இயேசுவோடு நாம் ஒத்துழைக்காவிட்டால், பிசாசுக்கு உதவிசெய்கிறவர்களாகத்தான் இருப்போம்.

## 9. இயேசுவைவிட அதிகமாக நண்பரையோ, குடும்ப அங்கத்தினரையோ நேசிப்பது நல்லதா?

**மத்தேயு 10:37.** *தகப்பனையாவது ____________________ என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் ____________________ நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.*

**லூக்கா 14:26.** *யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் ____________________ பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்.*

**மத்தேயு 12:50.** *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் ____________________ செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் ____________________ இருக்கிறான்.*

**குறிப்பு:** நமக்குப் பிரியமானவர்களுக்கு சத்தியத்தைச் சொல்லி, அவர்களை இரட்சிப்பிற்குள் நடத்துவதற்கு சிறந்த வழி, இயேசுவுக்கு நம் வாழ்வில் முதலிடம் கொடுப்பதுதான்; அதைத்தான் இயேசு இங்கே சொல்கிறார். நம் இரட்சகரும் சிருஷ்டிகருமானவரிடத்தில்தான் நாம் முதற்கண் பாசம் வைத்திருக்க வேண்டும்; மாறாக, நம் சுபாவத்தின்படி, நம் குடும்பத்தையோ, நண்பர்களையோ அதிகமாக நேசிப்பது ஆபத்தில் முடிந்துவிடும்.

## 10. இயேசுவைவிட ஒரு செழிப்பான வாழ்க்கையையோ, பூலோகச் செல்வங்களையோ பெரிதாகப் போற்றுவது ஞானமானதா?

**மத்தேயு 16:26.** *மனுஷன் ________________ முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ________________ ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?*

**லூக்கா 12:15.** *ஒருவனுக்கு எவ்வளவு திரளான ________________ இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல.*

**குறிப்பு:** ஒரு நல்ல வேலையும், ஆடம்பரப் பொருட்களும்தான் சந்தோஷத்தையும் பாதுகாப்பையும் கொண்டுவரமுடியும் என்று நாம் நம்பினால், அது கொடிய வஞ்சகமாகும். மாறாக, "ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்" என்று இயேசு சொன்னார். மாற்கு 10:25.

## 11. தேவன் நமக்குச் சத்தியத்தை வெளிப்படுத்தியபிறகும் தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியாமலேயே வாழ்வது பாதுகாப்பானதா?

**ஓசியா 4:6.** *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் ____________________; நீ ________________ வெறுத்தாய், ஆகையால் ... நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன்தேவனுடைய ________________ மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.*

**எபிரெயர் 10:26.** ________________ *அறியும் அறிவை அடைந்த* __S__________ *நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி (இல்லை).*

## 12. சத்தியத்தை தொடர்ந்து புறக்கணித்து வந்தால் என்னவாகும்?

**2தெசலோனிக்கேயர் 2:10–12.** *அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் ________________ மேலுள்ள ________________ அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் ________________ விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்.*

**யோவான் 3:19.** *ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் ________________________ இருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை ____________________ அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.*

**குறிப்பு:** இயேசுதாம் சத்தியம் என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றன (யோவான் 14:6). எவ்வளவுக்குச் சத்தியத்தை ஏற்றுக்கொள்கிறோமோ அவ்வளவுக்கு இயேசுவை ஏற்றுக்கொள்கிறோம்; எவ்வளவுக்குச் சத்தியத்தை மறுக்கிறோமோ அவ்வளவுக்கு இயேசுவை மறுக்கிறோம்.

### 13. கடைசிக்காலத்தில் தேவமக்களை உபத்திரவப்படுத்துபவர்கள் தாங்கள் சரியானதைத்தான் செய்வதாக நினைப்பார்களா?

**யோவான் 16:2.** *உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் _____________________________ ___________________ காலம் வரும்.*

### 14. சத்தியத்தை அறிந்தும் அதன்படி நடக்காதவர்களைக்குறித்து பேதுரு என்ன சொல்கிறார்?

**2 பேதுரு 2:21,22.** *அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை ____________ விலகுவதைப்பார்க்கிலும் அதை ______________தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே _____________________ திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.*

### 15. இயேசுவைப் பின்பற்றினால் சில போராட்டங்களை எதிர்கொண்டு, சுய மறுப்போடு வாழவேண்டியது வருமா?

**லூக்கா 9:23.** *ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் _______________, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.*

### 16. இயேசுவைப் பின்பற்றும் தீர்மானத்திற்கு வராமல் காலந்தாழ்த்துவது நல்லதா?

**எபிரெயர் 4:7.** இன்று *அவருடைய சத்தத்தைக் _____________________________ உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்.*

**எபிரெயர் 2:4.** இவ்வளவு *பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் ___________________________________ தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்.*

**2கொரிந்தியர் 6:2.** *இதோ, ______________________ அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய___________.*

**குறிப்பு:** தேவசத்தம் உங்கள் காதுகளில் கேட்கும் சமயம்தான் சிறந்த நேரமாகும்; தேவன் தம் சித்தத்தை உங்களுக்குக் காண்பிக்கும் நேரம்தான் அவருடைய சித்தத்தைச் செய்வதற்குச் சிறந்த நேரமாகும். இத்தகைய வாழ்க்கையைப் பெறுவதற்கான தீர்மானத்தைச் செய்ய ஏராளமான நேரம் இருப்பதாக, சாத்தான் மக்களை நம்பச்செய்கிறான்; இது அவனுடைய பிரபலக் கண்ணியாகும். தேவ ஆவியானவரின் உணர்த்துதலின் சத்தத்தைப் புறக்கணித்தால் காலப்போக்கில் அது மங்கிவிடும் என்பது சாத்தானுக்குத் தெரியும். பிறகு எப்போதாவது இயேசுவைப் பின்பற்றவேண்டும் என்று உண்மையாகவே தீர்மானம்செய்து வைத்திருக்கும் லட்சக்கணக்கானோர், இறுதியில் அழிவைத்தான் சந்திக்கப்போகிறார்கள்; ஏனென்றால், அந்த ‘எப்போதாவது’ ஒருபோதும் வராமலேயே போய்விடும்.

### 17. சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, பின்பற்றுவதால் உண்டாகும் நன்மை என்ன?

**சங்கீதம்119:165.** *உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு _______________ சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை.*

யோவான் 8:32. *சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை ______________________________ என்றார்.*

1பேதுரு 1:22. *ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் ________________________________________(ளுங்கள்).*

**குறிப்பு:** சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிகிறவர்கள் தங்கள் இருதயங்களிலும், வாழ்க்கையிலும் சொல்லமுடியாத சமாதானத்தையும் பாதுகாப்பையும் விடுதலையையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

### 18. இயேசு மூன்றுமுறை பேதுருவிடம் கேட்ட கேள்வி என்ன?

யோவான் 21:17. *மூன்றாந்தரம் அவர் அவனைநோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ ________________________________ என்றார்.*

**குறிப்பு:** தேவனுடைய சித்தத்திற்கு நீங்கள் முற்றிலும் கீழ்ப்படிகிறீர்களா என்பதை அறியும்படி, உங்களிடம் கேட்கும் ஒரு முக்கியமான கேள்வி இது: 'நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா?'

## நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

இந்தப் பாவ உலகத்தில் சத்தியம் எடுபடுவது கடினம்தான்; சொகுசான பாதையில் செல்லவே பலர் விரும்புவார்கள். ஆனால் உங்கள் அனைத்துப் பாவங்களுக்கும் விலையாக இயேசு தம் உயிரையே கொடுத்து, ஈடு இணையற்ற தம் அன்பை வெளிப்படுத்தியுள்ளார். உங்கள் வாழ்க்கைக்கு தேவன் மிகப் பெரிய திட்டத்தை வைத்துள்ளார். அதனால்தான் அவர் தம் சத்தியத்தை உங்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த அன்புக்கு பதிலாக, அவரை உங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டு, அவர் நடத்துகிற வழியில் சென்று, உங்கள் இருதயத்தை அவரிடம் ஒப்படைப்பீர்களா?

**பதில்:** ________________________________________________

## உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி தொடரட்டும்

இந்த வேதாகம ஆராய்ச்சித் தொடர் உங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தனவா? இதுபோல் இன்னும் அநேக வேத ஆராய்ச்சிப் பாடங்கள் இருக்கின்றன. பிற தீர்க்கதரிசனங்கள் பற்றிய அதிக தகவல்களுக்கும் இலவசப் புத்தகங்கள், ஒலிநாடாக்கள், ஒளிநாடாக்கள் போன்றவற்றிற்கும் கீழுள்ள முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்:

**காக்கும் கரங்கள்**
45, சேத்துப்பாக்கம்
தாமரைப்பாக்கம் அஞ்சல்
திருவள்ளூர்
சென்னை 601103

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com